







## 30 ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் பாடுபட்டு உருவாக்கிய

# தோட்டங்களை அழிப்பதா?

## பூச்சோங் தாமான் மாவார் மக்கள் குமுறல்!

(ஆர்.குணா)

**பூச்சோங், ஜூலை 3-**

**இங்கு தாமான் மாவார் பூச்சோங்கிற்கு அருகில் உள்ள ஓர் ஆற்றோரப் பகுதியில் வெறுமனே கிடந்த நிலத்தில் கால்நடைகளுடன் தோட்டங்களை அமைத்த மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் நேற்று அங்கிருந்த கொல்லைகளையும் கொட்டகைகளையும் சுபாங் ஜெயா மாநகர மன்ற அதிகாரிகள் உடைத்து தரைமட்டமாக்கினர்.**

இதனால் சுமார் 22 க்கும் மேற்பட்ட பல இனங்களையும் சேர்ந்த மக்கள் தங்கள் வேதனையையும் குமுறலையும் வெளிப்படுத் தினர். நாங்கள் என்ன பிழை செய்தோம். பல காலமாக சும்மா கிடந்த இடத்தில் தோட்டங்களை வைத்தோம்.

### எங்கள் உழைப்பை அழிப்பதா?

பயிர்களை வளர்த்தோம். கோழிகள், மீன்கள் மற்றும் பழத்தோட்டங்களை பயிரிட்டோம். அதுவும் எங்கள் வாழ்க்கைக்கும் வாழ்வாதாரத்திற்கும் வருமானத்தை தேட நாங்கள் கஷ்டப்பட்டு உருவாக்கிய இடத்தை இப்படி ஒரே நாளில் வந்து அழித்து தரைமட்டமாக்கிவிட்டார்களே



என்று அங்குள்ள மக்களின் சார்பில் சுப்பிரமணியம் நாராயணன் நேற்று மலேசிய நண்பனிடம் தெரிவித்தார்.

இந்த இடத்திற்கும் நில அலுவலகத்திற்கும் சம்பந்தமில்லை. ஆற்றோர கால்வாய் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு உட்பட்ட இடம் இது. சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு நாங்கள் உழைத்து காய்கறிகளை பயிரிட்டு வெளியில் கொண்டு சென்று அதை விற்று வருமானத்தை தேடி வந்தோம்.

யாருக்கும் எந்தப் பிரச்சினையும் நாங்கள் தரவில்லை. இது மிகவும் ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் ஓர் ஆற்றோரத்தில் இருக்கின்ற ஒரு நிலம் என்றார் சுப்பிரமணியம் நாராயணன்.

ஒருமுறை மாநகர மன்ற அதிகாரிகள் இந்த இடத்தை எல்லாம் ஆய்வு செய்து 6.5 ஏக்கர் கொண்ட இந்த நிலத்தை இங்குள்ள மக்களுக்கு அவரவர் வைத்துள்ள இடத்திற்கு ஏற்ப அதை பிரித்துக் கொடுக்குமாறு முடிவு செய்தனர்.

### புதிய பிரச்சினைகள் நெருக்கடிகள்

எங்களுக்கு இடப்பட்ட உத்தரவு எந்த ஒரு கட்டடத்தையும் எழுப்பக்கூடாது என்பதுதான். ஆனால் கடந்த 2 ஆண்டு காலமாக எங்களுக்கு கடுமையான



நெருக்குதல்களும் பிரச்சினைகளும் தரப்பட்டன.

கடந்த 22 ஆம் தேதி திடீரென எங்களை வெளியேறச் சொல்லி முன்னறிவிப்பு கொடுத்தார்கள். இந்த அறிவிப்பு வந்த 7 நாட்களில் கடந்த 29 ஆம் தேதி எங்கள் பயிர்களை அழித்து தரைமட்டமாக்கிவிட்டார்கள் என்று அவர் தலைமையில் பாஸ்கரன், செல்வராஜூ முனியாண்டி, கிருஷ்ணன் முனியாண்டி, சுந்தரம் ராஜூ, காத்தவராயன் சின்னையா, சுகேந்திரன் பச்சையப்பன் உட்பட இதர மலாய் சீன குடும்பங்களும் ஒன்று சேர்ந்து தங்கள் வேதனையை புலப்படுத்தினர்.

இதை தாமான் பெர்தானியான் கொமியூனிட்டி (விவசாய சமூக குடியிருப்புப் பகுதி) என்று வகைப்படுத்தப்பட வேண்டும் என்று இதற்கு முன்பு அதிகாரிகள் கூறியிருந்தனர்.

நாட்டில் கோழி, முட்டை, காய்கறி விலைகள் எல்லாம் விண்ணை நோக்கி உயர்ந்துள்ளது. வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டுள்ளது. வருமானம் இல்லாமல் மக்கள் தடுமாறுகிறார்கள். இந்த நேரத்தில் நாங்கள் பாடுபட்டு உழைத்து உருவாக்கிய பயிர் தோட்டங்களை பழத்தோட்டங்களை கொல்லைகளை அழிப்பதா? உடனடியாக மீண்டும் எங்களுக்கு அந்த இடத்தை வழங்க வேண்டும் என்று கோரி மாநில மந்திரி புசாருக்கும் வட்டார சட்டமன்ற நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கும் கவுன்சிலர்களுக்கும் அவர்கள் தங்கள் கோரிக்கை மனுவை சமர்ப்பித்தனர்.

---

# ஜிஎம் கிள்ளான் மொத்த விற்பனை சந்தை சுற்றுலாத்துறையை மேம்படுத்தும்

**கிள்ளான், ஜூலை 3-**

**கடந்த மாதம் கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்பிலிருந்து மலேசியா வழக்கமான வாழ்வியலுக்கு திரும்பியுள்ளது. கோவிட்-19 பெருந்தொற்று என்ற மருட்டல் காரணமாக நடமாட்டங்களை கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. இதனால் சுற்றுலாத் தொழில் ஏறத்தாழ நிர்மூலமாகும் நிலைக்குட்பட்டது.**




எனவே ஆக இறுதியான மாற்றம் சுற்றுலாத் தொழிலுக்கு உந்து விசையாக விளங்குகிறது. சிலாங்கூர் மாநிலத்தின் சுற்றுலாத்துறையினை மறுசீரமைக்கும் வண்ணம் Pusat Borong GM klang புது அணுகுமுறையினை கையாளுகிறது. சபா மற்றும் சரவாக் மாநிலங்களை சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு சிலாங்கூர் மாநிலத்தின் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள சுற்றுலாத் தலங்களை இம்மையம் அறிமுகப்படுத்துகிறது.

இத்தகைய சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் திட்டத்தின் பெயர் FAM Trip Bersama Media Borneo2022 Pusing Selangor Dulu சிலாங்கூர் சுற்றுலாத்துறை, டூரிசம் மலேசியா சபா, டூரிசம் மலேசியா சரவாக், கிள்ளான் மாநகர் மன்றம் ஆகிய தரப்புகளிடமிருந்து இந்த சுற்றுலாத்துறை மேம்பாட்டு திட்டத்திற்கு முழுமையான ஆதரவு கிட்டியுள்ளது.

ஜிஎம் கிள்ளான் மொத்த விற்பனை சந்தையின் தர அடையாள முத்திரை தொடர்புத்துறையின் நிர்வாகி நோர் சுஹாய்டா ஒத்மான் இங்கே அத்தியாவசிய அம்சங்களை சுட்டிக்காட்டுகிறார். நட்புறவான மற்றும் நெருக்கமான அணுகுமுறையானது விரிவான தாக்கத்தை ஏற்படுத்தும்.

சபா, சரவாக் மக்களை சிலாங்கூர் மாநிலத்திற்கு சுண்டியிழுக்கும் கிள்ளான் மாநில நகரமானது தனக்கே உரிய தனிச்சிறப்புகளால் நிமிர்ந்து நிற்கிறது. மலேசியாவிலேயே ஆகப் பெரிய மொத்த விற்பனை சந்தையினை கிள்ளான் மாநகர் மன்றம் கொண்டுள்ளது.






GM Klang என்ற மாபெரும் விற்பனை சந்தை மையம் சபா, சரவாக் ஆகிய மாநிலங்களின் சுற்றுலாக்காரர்களை சுண்டியிழுக்கிறது. பொருட்களை கொள் முதல் செய்வதில் வித்தியாசமான அனுபவங்களை பெற வாடிக்கையாளர்கள் விரும்புகிறார்கள். இத்தகைய நோக்கம் கொண்டவர்களுக்கு இந்த சுற்றுலாத்துறை மேம்பாட்டு திட்டம் ஈர்ப்பு சக்தியாக விளங்கும் GM Klang மொத்த விற்பனை சந்தையானது பல்வேறு வகை பொருட்களுக்கு வழி செய்வதோடு சிறு வியாபாரங்களில் பங்கேற்க விரும்புபவர்களுக்கு விரிவான வாய்ப்புகளை வழங்குகிறது. இங்கு ஏற்கெனவே வீற்றிருக்கும் மொத்த விற்பனையாளர்களிடமிருந்து விற்பனைக்கான ஏற்பாடுகளை பெறலாம் என்று நிர்வாகி நோர் சுஹாய்டா ஒத்மான் தெரிவித்தார்.

Program FAM Trip என்பது அநேக நிகழ்வுகளை கொண்டது. நான்கு நாட்களுக்கு நடைபெற்றது. சிலாங்கூர் மாநிலத்தின் சுற்று வட்டார பகுதிகளுக்கு சுற்றுலாக்காரர் வருகை. ஷா ஆலம் மாநில மசூதி, சுல்தான் சலாவுதின் அப்துல் அஜிஸ் மசூதி, தாமான் தாசேக் ஷா ஆலம், பூலாவ் கெத்தாம், GM Klang Pusat Borong பகுதிகள் இந்த வருகை பட்டியலில் அடங்கும், கிள்ளான் மாநகர் மன்றத்தின் வரலாற்று பிரசித்தி பெற்ற பகுதிகளுக்கு வருகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கிள்ளான் மாநகர் மன்றம் இதற்கு பிரத்தியேக ஏற்பாடு செய்திருந்தது. GM Klang என்ற மொத்த விற்பனை சந்தையின் விவேகமிக்க பங்காளி GMBB, பகுதிக்கு வருகை புரிய வருகையாளர்கள் தவறவில்லை.

AG:10572/3/7/22

MALAYSIA NANBAN Published by Penerbitan Sahabat (M) Sdn. Bhd. (157000-T) No.544-1, Batu Complex off Jalan Ipoh Batu 3¼, 51200 Kuala Lumpur Tel : 03-62515981 Editorial (Fax) 03-62591617 E-mail: mnanban12@gmail.com
Advertisement (Fax) 03-62515986 E-mail: advertnanban@gmail.com Printed by: PENERBITAN SAHABAT (M) SDN. BHD. No.8, Jalan 32/10A, Taman Perindustrian IKS (MIEL), Mukim Batu, 68100 Batu Caves.